**செய்தி வெளியீடு எண்: 085** **நாள்: 02.02.2019**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் ஆலோசனையின் பேரில் சிங்கப்பூர், ஹாங்காங்கை தொடர்ந்து கத்தார் நாட்டில் ஆவின் விற்பனையை மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

தமிழகத்தில் அதிகமாக விற்பனையாகும் ஆவின் பாலுக்கு வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. திரவ உணவை பதப்படும் முறையான அல்ட்ரா பேஸ்காரியாக்கம் முறையில், பாலை கொதிக்க வைத்து பதப்படுத்தி ஒரு லிட்டர் அளவில் பேக் செய்து வெளிநாடுகளுக்கு ஆவின் சப்ளை செய்து வருகிறது. இவ்வாறு அனுப்பப்படும் பால் குறைந்தது 6 மாதங்கள் வரை கெடாது. இந்தப் பாலை குளிர்சாதன பெட்டியிலும் வைக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு அடைக்கப்பட்டு அனுப்பப்படும் ஆவின் பாலானது வெளிநாடுகளில் உள்ள சூப்பர் மார்க்கெட் போன்ற பிரபல கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆவின் பாலை, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கிறார்கள். ஏற்கனவே சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் நாடுகளுக்கு டெட்ரா பேக்கிங் செய்யப்பட்ட ஆவின் பால் கன்டெய்னர்களில் அனுப்பி வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடிகே.பழனிச்சாமி அவர்களின் ஆலோசனையின்படி கத்தார் நாட்டுக்கு ஆவின் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து கத்தார் நாட்டில் ஆவின் விற்பனையை மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் நேற்று (01-02-2019) தொடங்கி வைத்தார்கள். கத்தார் நாட்டின் தலைநகர் தோகாவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆவின் நிர்வாக இயக்குனர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசும்போது, “கத்தார்” நாட்டில் வாழும் அனைத்து இந்திய குடிமக்களுக்கும், தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் அனைவருக்கும் என் இனிய பணிவான வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் உத்தரவிற்கு இணங்க கத்தார் நாட்டில் இந்தியாவில் தென்கோடியில் இருக்கக்கூடிய தமிழத்தின் தலை சிறந்த நிறுவனமான ஆவின் நிறுவனத்தின் ஆவின் பால் விற்பனையை இங்கே தொடங்கியுள்ளோம். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் ஆவின் நிறுவனம் முனைப்போடு செயல்பட்டு வருகின்றது. லாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கோடு ஆவின் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மறைவிற்குப் பின்பு தமிழ்நாட்டின் முதலமைச்சராக திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இன்று எல்லா துறைகளும் தமிழகம் முன்னேற்றம் அடைந்துள்ளது. மறைந்த முதல்வர் அம்மா அவர்களின் தலைமையில் சென்னையில் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது, இந்த 2-வது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல கோடி முதலீட்டை தமிழகம் பெற்றுள்ளது. எளிய முறையில் சாதரணமாக அணுகக்கூடிய ஒரு முதலமைச்சராக தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் திகழ்வதால் தொழில்துறை மட்டுமல்ல வேளாண்மைத் துறை, பால் வளத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் தமிழகம் சிறந்து விளங்குகின்றது. இந்திய அரசின் பல்வேறு விருதுகளை தமிழக அரசு பெற்றுள்ளது. அந்த வகையில் நான் சார்ந்திருக்கின்ற ஆவின் நிறுவனம் சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளில் ஆவின் பால் உட்பட ஆவின் பால் உபபொருட்களை விற்பனை செய்து வருகின்றோம். இன்றைக்கு கத்தார் நாட்டில் எங்களது ஆவின் பொருட்களை அறிமுகப்படுத்தி விற்பனையை துவங்கியுள்ளோம். கத்தார் நாட்டு மக்கள் ஒரு சுவையான பாலை

அருந்த வேண்டும் என்று இந்த நாட்டின் மன்னரின் அனுமதியை பெற்று எங்களது ஆவின் பால் விற்பனையைத் தொடங்கியுள்ளோம். ஆவின் பால் சுவையான மனமான பாலாகும். ஆவின் பாலை விரும்பி அருந்துபவர்கள் வேறு பாலை அருந்த மாட்டார்கள். அந்த அளவிற்கு ஆவின் பால் தரம் உள்ளது. எனவேதான் சிங்கப்பூரில் ஆவின் நிறுவனம் கால்பதிக்க முடிந்தது. சிங்கப்பூர், ஹாங்காங் உட்பட வளைகுடா நாடுகளில் உணவு தரச்சான்று, கட்டுப்பாடுகள் எப்படி என்று அனைவருக்கும் தெரியும். உணவு பாதுகாப்பில் கடுமையான சட்டங்கள் கொண்ட இந்த நாடுகளில் ஆவின் பொருட்கள் விற்பனை நடைபெறுகின்றது என்று சொன்னால் ஆவின் தரத்தை அறிந்து கொள்ளலாம். ஆவின் பொருட்கள் விற்பனை தமிழர்களின் பெருமையை வெளிநாடுகளில் பறைசாற்றும் வகையில் உள்ளது. உலகத்தில் பல்வேறு நாடுகளில் தமிழர்களும், தென் இந்தியர்களும் அதிகமாக வசித்து வருகின்றனர். பல நாடுகளில் அந்த நாட்டின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற இடத்தில் தமிழர்கள் வளர்ச்சி அடைந்துள்ளனர். கத்தார் நாட்டில் ஏழு லட்சத்திற்கு அதிகமான தென்இந்தியர்கள் வாழ்கின்றனர். 3 லட்சத்திற்கு அதிகமான தமிழர்கள் வாழ்கின்றனர். மேலும் அதிகமான கேரளா மாநிலத்தினர், தெலுங்கு மாநிலத்தினர் வாழ்கின்றனர். கத்தார் நாட்டின் வளர்ச்சியில் இந்திய நாட்டு மக்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். இது எனக்கு பெருமையாக உள்ளது. தமிழர்கள் எந்த நாட்டோடும் இணைந்து செயல்படக்கூடியவர்கள். இலங்கை, சிங்கப்பூர், ஹாங்காங் உட்பட எந்த நாட்டில் வசித்தாலும் அந்த நாட்டின் வளர்ச்சிக்கு தமிழர்கள் உறுதுணையாக இருந்து பாடுபடுவார்கள். கத்தார் நாட்டில் ஒருதமிழர் வீட்டில் நான் சாப்பிட்டது என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத நினைவாக அமையும். நம்முடைய ஊர் இட்லி, பொங்கல், உளுந்த வடை கடல் கடந்து கிடைக்கின்றது என்று சொன்னால் பெருமையாக உள்ளது. வந்தாரை வாழவைக்கும் இனமாக தமிழ் இனம் திகழ்கின்றது. கத்தார் நாட்டில் தமிழர்கள் எனக்கு கொடுத்த வரவேற்பு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. கத்தார் நாட்டில் ஆவின் பால், ஆவின் பால் உபபொருட்கள் விற்பனை தனி முத்திரை பதிக்க உள்ளது. ஆவின் பால் பொருட்கள் விற்பனை கத்தார் நாட்டில் மிகப்பெரிய வெற்றியடைய போகின்றது. தரமான பொருட்களை விற்பனை

செய்வதில் கத்தார் நாடு மிகவும் கவனமாக செயல்பட்டு வருகின்றது. ஆவின் பால் பொருட்கள் நல்ல தரமான பொருளாக உள்ளதால் விற்பனைக்கு கத்தார் நாடு அனுமதி வழங்கியுள்ளது. சத்தான, தரமான பாலான ஆவின் பாலை நீங்கள் விரும்பி சாப்பீடுவீர்கள். ஒருமுறை சாப்பிட்டால் மீண்டும் மீண்டும் சாப்பிடத் தூண்டும் வகையில் ஆவின் பொருட்கள் இருக்கும். கத்தார் நாட்டில் ஆவின் விற்பனையை துவங்கியுள்ளதால் நாங்கள் வெற்றி அடைந்துள்ளோம். கத்தார் நாட்டில் ஆவின் பால் எப்போதும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் எங்களுக்கு கொடுத்திருக்கின்ற பணியை நாங்கள் சரியாக செய்து முடித்துள்ளோம். கத்தார் நாட்டு மக்கள் ஆவின் பால் உட்பட ஆவினின் அனைத்துப் பொருட்களையும் விரும்பி சாப்பிட வேண்டும். ஆவின் பால் உலகத்தைச் சுற்றி வரும். அதற்கு உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என்று பேசினார்".

இந்நிகழ்ச்சியில், கத்தார் நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு.குமரன் ஐ.எப்.எஸ்., இந்தியத் துணைத் தூதர் திரு.பகத் ஐ.எப்.எஸ்., கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், ஆவின் வெளிநாடு விற்பனை பொது மேலாளர் திரு.ஆர்.எஸ்.புகழேந்தி, கத்தார் நாட்டின் ஆவின் இறக்குமதியாளார் திரு.யூஸெஃப் ஜாபர் அல் ஜாபர், சேலம் பால்பண்ணை ஒன்றியத் தலைவர் திரு.ஜெயராமன், கத்தார் நாட்டின் இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு.அசீம் அப்பாஸ், ஏற்றுமதியாளர் திரு.அப்துல் ஜெலில், கத்தார் நாட்டின் தமிழ் சங்கத் தலைவர் டாக்டர். துரைசாமி குப்பன், துணைத்தலைவர் டாக்டர். கவுரிசங்கர், பொருளாளர் திரு.அப்துல்காதர் மாலிக் மற்றும் முகமது அபுபக்கர், முகமது இஸ்மாயில், அகமது அல் ஜபார், பசுபதிஆனந்த், கவிஞர் சிவக்குமார், கத்தார் மற்றும் இந்திய நாட்டு தொழில் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**